## பத்திரிக்கைச் செய்தி

## வாக்காளர் பட்டியலை தூய்மைப்படுத்த சிறப்பு களப்பணி ஆய்வு

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள இடம்பெயர்ந்த வாக்காளர்கள், இறந்த வாக்காளர்கள், இரட்டைப்பதிவு வாக்காளர்களை நீக்கி வாக்காளர் பட்டியலை தூய்மைப்படுத்தும் பணி **15.02.2016 முதல் 29.02.2016 வரை கள ஆய்வு பணி** நடைபெறவுள்ளது. மேற்கண்ட பணிக்காக வாக்குச்சாவடிநிலை அலுவலர்கள் வாக்காளர்பட்டியலுடன் வீடு வீடாக சென்று சரிபார்ப்பு பணி மேற்கொள்ள உள்ளனர். மேற்கண்ட பணிக்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் களப்பணிக்கு வரும் போது பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அவர்களது குடியிருப்பு பகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம்பெயர்ந்த வாக்காளர்கள், இறந்த வாக்காளர்கள், இரட்டைப்பதிவுகள் உடையவாக்காளர்கள் எவரும் இருப்பின் அது குறித்த விபரத்தினை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் தெரிவிக்கலாம். மேலும், வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனைக்குரிய பதிவுகள் இருப்பின் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் அவை குறித்த பட்டியலை வாக்காளர் பதிவு அலுவலகங்களிலும் உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்களிலும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் அளிக்கலாம்.

மேலும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்களின் கள ஆய்வுக்குப்பின் மேற்படி பதிவுகள் குறித்த நீக்கல் பட்டியல் முதன்மை தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சியரின் இணையதள முகவரியிலும் வெளியிடப்படுவதுடன் வாக்காளர் பதிவு அலுவலகங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் மேற்படி நீக்கல் பட்டியல் பார்வைக்கு அளிக்கப்படும். அதனைத் தொடர்ந்து நீக்கப்படும் வாக்காளர்களுக்கு உரிய காலஅவகாசம் அளித்து எழுத்து மூலம் அறிவிப்பு அளிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே பொதுமக்கள் மற்றும் அரசியல்கட்சி பிரமுகர்கள் இப்பணிக்கு தங்களின் முழு ஒத்துழைப்பையும் அளிக்குமாறு மாவட்டஆட்சியர் கேட்டுக் கொள்கிறார்.

ஒம்/-ந.நடராஜன்
மாவட்ட ஆட்சியர்
இராமநாதபுரம்

/ஆணைப்படி/

தனிவட்டாட்சியர்(தேர்தல்)